**அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 3/2014**

எனது இல. PSC/APP/8/2/52/2014

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,

இல. 177, நாவலை வீதி,

நாராஹேன்பிட்ட,

கொழும்பு 05.

2014 ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி.

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கும்.

**<u>2006.01.01 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவிலுள்ள இலங்கை பொறியியல் சேவை, இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை மற்றும் இலங்கை விவசாய சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்புகளின் ஏற்பாடுகளை அமுலாக்கம் செய்தல்</u>**

உயர் நீதிமன்ற விண்ணப்ப இலக்கம் SC(FR) 312/2008 இன் வழக்குத் தீர்ப்புக்கு அமைய 2006.01.01 தொடக்கம் செயல்வலுப்பெறுகின்ற மேலுள்ள சேவை பிரமாணக் குறிப்புகளின் ஏற்பாடுகளை அமுலாக்கம் செய்தல் தொடர்பாக பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்க சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

01. 2006.01.01 ஆந் திகதிக்கு பின்னர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட இலங்கை பொறியியல் சேவையின் சகல உத்தியோகத்தர்களும், 2013 நவம்பர் 11 ஆந் திகதிய 1836/06 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெற்றதும் இதனகத்துப் பின்னர் திருத்தங்களுக்கு உட்படக்கூடியதுமான இலங்கை பொறியியல் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

02. 2006.01.01 ஆந் திகதிக்கு பின்னர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சகல உத்தியோகத்தர்களும், 2013 டிசம்பர் 13 ஆந் திகதிய 1840/51 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெற்றதும் இதனகத்துப் பின்னர் திருத்தங்களுக்கு உட்படக்கூடியதுமான இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

03. 2006.01.01 ஆந் திகதிக்கு பின்னர் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட இலங்கை விவசாய சேவையின் சகல உத்தியோகத்தர்களும், 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1877/52 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பெற்றதும் இதனகத்துப் பின்னர் திருத்தங்களுக்கு உட்படக்கூடியதுமான இலங்கை விவசாய சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

TRANSLATION

04. மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சேவை பிரமாணக் குறிப்புகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைய 2006.01.01 ஆம் திகதிக்கு அச்சேவைகளின் தரம் III க்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ள மற்றும் 2006.01.01 ஆம் திகதி தொடக்கம் புதிய சேவை பிரமாணக் குறிப்புகள் பிரசுரிக்கப்பெற்ற தினங்கள் வரை வகுப்பு II இன் தரம் I க்கு பதவியுயர்வு பெற்ற சகல உத்தியோகத்தர்களும், முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு அமைய வகுப்பு II இன் தரம் I க்கு பதவியுயர்வு பெற்றுள்ள தினங்களிலிருந்து செயல்வலுப்பெறும் வண்ணம் தரம் II க்கு பதவியுயர்வு வழங்கப்பெற்றவர்களாக கருதப்படுவர்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ரி.எம்.எல்.சி.சேனாரத்ன

செயலாளர்,

அரசாங்க சேவை ஆணைக்குழு.

TRANSLATION